**தம்புள்ளை மாநகர சபை**

**மாத்தளை மாவட்டம்**

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் 2020 ஏப்ரல் 23 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்று தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2020 மே 29 ஆம் திகதியும், விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆம் திகதியும் சபைக்கு அனுப்பப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தம்புள்ள மாநகர சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | கழிவுகளை எரிக்கும் தகளியொன்றைக் கட்டும் செயற்திட்டத்தின் மீளாய்வாண்டின் இறுதியில் கடன்கொடுத்தோர் மீதி ரூபா. 334,892 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்கு சீராக்கம் செய்யப்பட வேண்டும் | 2020 ஆம் ஆண்டில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ii) | நகர ஆயுர்வேத மத்திய நிலையத்தின் இருப்பு மீதி ரூபா 24,810 தொகை கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | இருப்பு மீதி சீராக்கப்பட்டு கணக்கு சீராக்கம் செய்யப்பட வேண்டும் | 2020 ஆம் ஆண்டில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (iii) | கட்சிா இயந்திரங்கள் கட்டிடங்கள், கொம்போஸ்ட் இயந்திர முறைமை மற்றும் அதனுடன் அண்மிதத நிர்மாணங்கள் நிலையான சொத்துக்களாக மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுமதி இனங்காணப்பட்டு சீராக்கம் செய்யப்பட வேண்டும் | 2020 ஆம் ஆண்டில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | மீளாய்வாண்டில் ரூபா 682,105 பெறுமதியான சொத்துக்கள் களஞ்சியசாலைக்குக் கிடைத்திருக்காத போதிலும் கடன்கொடுத்தோராகக் கருதி கணக்கிடப்பட்டிருந்தது. | தவறு சீராக்கப்பட்டு கணக்கு தயாரிக்கப்பட வேண்டும் | 2019 ஆம் ஆண்டின் போது கட்டளையிடப்பட்டதால் கணக்கீடு செய்யப்பட்டதாக தெரிவத்துக் கொள்கின்றேன் |
| (v) | மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்தப்பட வேண்டிய வெட் வரி கணக்கின் மீதி ரூபா **659,598** தொகை கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்கு சீராக்கம் செய்யப்பட வேண்டும் | 2020 ஆம் ஆண்டில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |
| (vi) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 16,817,250 ஆன அறவிடப்பட வேண்டிய கடை வாடகை பதிவழிக்கும் கணக்கு மீதி மீளாய்வாண்டில் திரடண்ட நிதியம் மூலம் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக சீராக்கம் செய்யப்பட வேண்டும் | 2020 ஆம் ஆண்டில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |
| (vii) | நிலையான சொத்துக்களின் கூட்டுத் தொகை மற்றும் மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்தினால் பங்களிக்கும் கணக்கு ஆகியவற்றுக்கிடையே ரூபா 317,522,807 வேறுபாடு காணப்பட்டது. | வேறுபாட்டிறந்கு காரணம் இனங் காணப்பட்டு சீராக்கம் செய்யப்பட வேண்டும் | 2020 ஆம் ஆண்டில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |

(ஆ) இணங்காத கணக்குகள்
-----------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை தயாரிக்கப்பட்டிருந்த நிதி கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள 04 கணக்கு மீதிகளின் பெறுமதிகளை அக்கணக்கு மீதிகளுக்குப் பயன்படுத்தப்பட்ட ஆவணங்களின் மீதிகளுக்கு இடையேரூபா 42,742,499 வேறுபாடு காணப்பட்டது | பயன்படுத்தப்பட்ட ஆவணங்களில் காணப்படும் மீதிகள் மற்றும் நிதி கூற்று மீதிகள் ஆகியவற்றின் இடையே வேறுபாடு இருக்க முடியாது என்பதால் அட்டவணைகள் மற்றும் நிதி கூற்றுக்கள் சரி செய்யப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன் |

(இ) கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

கிடைக்க வேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் இறுதியில் 05 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலப் பகுதியிலிருந்து கிடைக்க வேண்டிய வரித் தொகையின் பெறுமதி ரூபா 4,866,121 ஆகக் காணப்பட்டது. | நிலுவைல பெறுமதியை அறவிடுவது சபையின் பொறுப்பொன்றாகும் | மேலும் காணப்படும் நிலுவைத் தொகையை அறவிட 2020 ஆம் ஆண்டிலிருந்து புதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக அறியத் தருகிறேன். |
| (ii) | 05 ஆண்டுகளிற்கும் மேற்பட்ட காலமாக கிடைக்க வேண்டியிருக்கும் கடை வாடகைகளின் பெறுமதி ரூபா 9,984,149 ஆகக் காணப்பட்டது. | நிலுவைல பெறுமதியை அறவிடுவது சபையின் பொறுப்பொன்றாகும் | மேலும் காணப்படும் நிலுவைத் தொகையை அறவிட 2020 ஆம் ஆண்டிலிருந்து புதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக அறியத் தருகிறேன். |
| (iii) | கடந்த ஆண்டுகளுக்கு உரிய அறவிடப்பட வேண்டிய விளம்பரப் பதாகைகளின் கட்டணப் பெறுமதி ரூபா **1,128,816** ஆகக் காணப்பட்டது. | நிலுவைலஷ பெறுமதியை அறவிடுவது சபையின் பொறுப்பொன்றாகும் | அறவிட முடியாத் தொகைகளை பதிவழிப்பதற்கான அனுமதி பொதுச் சபையிலிருந்து கிடைத்திருப்பதாக அறியத் தருகிறேன். |

செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி தினத்தில் செலுத்த வேண்டிய கணக்கு மீதிகள் 04 இன் மொத்தப் பெறுமதி ரூபா 113,247,881 ஆகக் காணப்பட்டதோடு 05 ஆண்டுகளுக்கும் மேலாக தீர்க்கப்படாதிருந்த மீதி ரூபா 87,232,634 ஆகக் காணப்பட்டது. | மீதிகளைத் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆம் ஆண்டில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |

(ஈ) கணக்காய்வுக்குத் தேவையான எழுத்து மூலமான சான்றுகள் காணப்படாமை

தகவல்களை சமர்ப்பிக்கப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா **215,291,866** பெறுமதியான **03** கணக்கு வகைகளுக்கு உரிய சான்றுகள் சமர்ப்பிக்கப்படாத காரணத்தால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமான முறையில் மெய்மையாய்வு செய்ய முடியவில்லை. | சான்றுகளுடன் சொத்துக்கள் பேணப்பட வேண்டும். | சான்றுகளுடன் சரியான ஆவணங்களைப் பேண நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். |

1.4 இணக்கமின்மை

**1.4.1** சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| **(அ)** | இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | | | |
| i | **XIX** அத்தியாயத்தின் 5.3.1 ஆம் பிரிவு | நகர ஆணையாளருக்கு மா நகர சபையினால் வழங்கப்பட்டிருந்த உத்தியோகபூர்வ வாசஸ்தலத்துக்கு சம்பளத்திலிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | தாபன விதிக் கோவையின் பிரகாரம் வீட்டு வாடகையை அறவிடுவது மா நகர சபையின் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். | வீட்டு வாடகையை வசூலிப்பது தொடர்பாக கடிதம் மூலம் அறியத் தந்திருப்பதை அறியத் தருகிறேன். |
| ii | **VIII** அத்தியாயத்தின் **9.10.1** மற்றும் **10.2** ஆம் பிரிவுகள் | ஒரு நாளைக்கு 08 மணித்தியாலங்களுக்குக் குறையாமல் பணி புரிந்திருப்பதாகக் குறிப்பிட்டு, வருகை மற்றும் வெளியேறுதல் தொடர்பான ஆவண அத்தாட்சிகள் இல்லாமல் விடுமுறை தினப் படிகள் வழங்கப்பட்டிருந்தன. | தாபன விதிக் கோவை மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் விடுமுறை தினப் படிகள் வழங்கப்பட வேண்டும். | அங்கீகரிக்கப்பட்ட விடுமுறை தின கடமைக்கு நகரபிதாவின் அனுமதி பெறப் பட்டிருப்பதாக அறியத் தருகிறேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் நிதி பிரமாணங்கள் | | | |
| i | நிதி பிரமாணம் 104 | நகர சபைக்குச் சொந்தமான வாகனங்கள் 05 இற்கு நிகழ்ந்துள்ள விபத்துகள் தொடர்பாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு சேதத்திற்குக் காரணமான நபர்கள் அடையாளம் காணப்படவில்லை. | நட்டத்துக்குப் பொறுப்பானவர்களை இனங் காண்பது கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். | விபத்து தொடர்பாக வழக்குகள் இடம்பெறுவதாகவும் அறிய தருகின்றேன் |
| ii. | நிதி பிரமாணம்1644 | நகர சபைக்குச் சொந்தமான 21 வாகனங்களின் நாளாந்த ஓட்டப் பதிவுகள் முறையான விதத்தில் கணக்காய்வின் போது சமர்ப்பிக்கப் படவில்லை. | நிதி பிரமாணங்களளின் பிரகாரம் ஓட்டப் பதிவுகள் குறிப்பிட்ட தினத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | வாகன ஓட்டக் குறிப்புக்களை சரியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2008 ஜுன் 06 ஆம் திகதிய 13/2008 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 04 ஆம் பிரிவு | நகர ஆணையாளர் மாதாந்த எரிபொருள் அளவை விட கூடுதலான எரிபொருளைப் பெற்றுக் கொண்டிருந்ததுடன் அந்த மேலதிக எரிபொருளின் அளவிற்கேற்ப வாகனம் ஓட்டத்தில் ஈடுபடுத்தியிருக்க வில்லை. | எரிபொருள் நுகர்வு சரியானது என்பதையும் வாகனத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தர் கவனிக்க வேண்டும் உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு மேலதிக எரிபொருளைப் பெற்றுக் கொள்ளும்போது சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | கருத்து தெரிவித்திருக்க வில்லை |
| (ஈ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிக்குரிய இலக்கம் 03/2016 உடைய சுற்றறிக்கையின் 03 ஆவது பிரிவு | 18 வாகனங்களுக்குரிய இற்குரிய எரிபொருள் பரிசோதனை நடத்தப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் வாகன எரிபொருள் சோதனை நடத்தப்பட வேண்டும். | கருத்த தெரிவிக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய மீண்டெழும் வருமானம் ரூபா 11,433,711 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 17,358,025 ஆக இருந்தது.

### 2.2 நிதிக கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கணக்கிற்குரிய 2018 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திலிருந்து மெலதிப் பற்றொன்று காணப்படுவதோடு மேலதிகப் பற்றுக்கான வட்டியாக மீளாய்வாண்டில் ரூபா 762,308 தொகை செலுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் அந்தக் கணக்கின் மீதி ரூபா.12,821,930 மேலதிகப் பற்றாகக் காணப்பட்டது. | தொடர்ச்சியாக மேலதிப் பற்றைப் பராமரித்து வைத்திருந்து அதற்கான வட்டியைச் செலுத்தி வருவது பயனுள்ள நிதி முகர்மை அல்ல என்பதனால் இந்த நிலைமையைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020.04.30 ஆம் திகதியில் மேலதிகப் பற்று ரூபா 8,374,582 வரை குறைக்கப்பட்டிருப்பதாக அறியத் தருகிறேன். |

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமானம் | 2019 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 23,300,000 | 12,959,470 | 12,582,035 | 6,408,381 | 4,266,000 | 17,113,916 | 17,863,971 | 6,410,945 |
| வாடகை | 18,125,000 | 19,191,140 | 18,385,911 | 12,450,636 | 16,540,000 | 17,183,094 | 19,323,353 | 11,632,488 |
| அனுமதிப் பத்திரக் கட்டணங் கள் | 11,730,000 | 10,139,127 | 10,179,212 | - | 11,590,000 | 7,171,410 | 8,770,598 | 55,886 |
| ஏனைய வருமானம் | 92,943,000 | 56,401,872 | 47,846,685 | 10,327,166 | 31,777,600 | 39,154,881 | 46,313,508 | 8,110,216 |
| மொத்தம் | 146,098,000 | 98,691,609 | 88,993,843 | 29,186,183 | 64,173,600 | 80,623,301 | 92,271,430 | 26,209,535 |

### 2.3.2 வீத வரிகள் மற்றும் வரிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய வீத வரி வருமான நிலுவை ரூபா 6,408,382 ஆகக் காணப்பட்டது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | நிலுவை பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். |

### 2.3.3 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் பேரூந்து தரிப்பிடங்கள் மற்றும் மொத்த சந்தைக் கடைகளின் வாடகை நிலுவையாக ரூபா 12,126,636 அறவிடப்பட வேண்டியிருந்ததோடு கடந்த வருடத்தின் வாடகை பாக்கி மற்றும் மீளாய்வாண்டின் பட்டியல் பிரகாரம் கூட்டுத் தொகை ரூபா 16,677,293 தொகையில் 27 சதவீமான ரூபா 4,557,291 தொகை மாத்திரமே மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருந்தது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | கருத்துரை தெரிவிக்கவில்லை |

2.3.4 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) நகர சபையின் அதிகாரத்துக்கு உட்பட்ட பிரதேசங்களில் இயங்கும் 554 வாடகை முச்சக்கர வண்டிகளிலிருந்து பதிவுக் கட்டணங்களாக ரூபா 602,250 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | கருத்துரை தெரிவிக்கவில்லை |
| (ஆ) தம்புள்ளை - கல்சரல் ஹெரிடேஜ் தனியார் நிறுவனம், தம்புள்ளை - மஞ்சே ரெஸ்டுரண்ட் மற்றும் சந்ததிய ஹோட்டல் ஆகிய நிறுவனங்களிடமிருந்து 2015 - 2019 ஆம் ஆண்டுகளுக்குக் கிடைக்க வேண்டிய 1% வியாபார வரியை அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | கருத்துரை தெரிவிக்கவில்லை |

2.3.5 ஏனைய வருமானங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் பிரதான பாதைகளில் பொருத்தப்பட்டிருந்த விளம்பரப் பதாகைகளில் இருந்து கிடைக்க வேண்டிய ரூபா 822,400 ஆன வருமானம் அறவிடப்பட்டிருக்க வில்லை. | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | கருத்துரை தெரிவிக்கவில்லை |
| (ஆ) நகர சபைக்குரிய இறைச்சிக் கடைகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கேள்வி கட்டணங்கள் ரூபா 2,017,057 ஆகக் காணப்பட்டது. | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | கருத்துரை தெரிவிக்கவில்லை |
| (இ) மீளாய்வாண்டின் இறுதியில் கழிப்பறைக் கட்டண நிலுவை ரூபா 889,581 ஆகக் காணப்பட்டது. | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துரை தெரிவிக்கவில்லை |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | கவஷிமா வேலைத் திட்டத்துக்கு உரிய கழிவுகள் வழங்கும் நிறுவனங்களிடமிருந்து 2019 திசெம்பர் 31 இல் ரூபா 254,625 பெறுமதியான தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | கருத்துரை தெரிவிக்கவில்லை |

2.3.6 நீதிமன்ற தண்டப் பணங்கள் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் தலைமைச் செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2019 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணங்களின் பெறுமதி ரூபா 5,203,800 ஆகக் காணப்பட்டது. | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | முத்திரைக் கட்டணங்களில் ரூபா 5,203,800 மாத்திரமே மேலும் அறவிடப்பட வேண்டியதாக அறியத் தருகிறேன். |

2.4 மிகை கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாநகர சபை சட்ட விதிமுறைகளின் பிரகாரம் பொறுப்புக் கூற வேண்டியவர்களுக்கு எதிராக என்னால் மீளாய்வாண்டில் விதிக்கப்பட்ட மிகை கட்டணங்களுக்குரிய ரூபா 206,064 இன்னும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | மிகை கட்டணங்களை அறவிடுவதை துரிதப்படுத்த வேண்டும் | மிகை கட்டணப் பெறுமதியில் ரூபா 20,000 தொகை தற்போது அறவிடப்பட்டிருப்பதை அறியத் தருகிறேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

மாநகர சபைகள் அதிகாரச்சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) துணை விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மா நகர சபை சட்ட விதிகளின் 272 ஆம் பிரிவின் பிரகாரம் துணை விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டி இருந்த போதிலும் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரை 10 விடயங்களுக்கு மாத்திரம் துணை விதிகள் தயாரிக்கப்பட்டிருந்த போதும் அவை வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை. | மா நகர சபை சட்ட விதிகளின் பிரகாரம் துணை விதிகள் உடனடியாக பிறப்பிக்கப்பட வேண்டும். | வரைவு துணை விதிகள் மா நகர சபையிடம் முன் வைக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டுள்ளதோடு அதிகாரத்துடன் கூடிய துணை விதிகளாக ஆக்குவதற்குத் தேவையான எதிர் வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அறியத் தருகிறேன். |

(ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த பணிகளுக்கான வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயற் திட்டத்தைத் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை. |

(இ) எதிர்பார்த்த விளைவு மட்டத்தைப் பெற்றுக் கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அபிவிருத்தித் திட்டங்கள் 04 இனை நிறைவேற்றுவதற்காக ரூபா 2,967,266 தொகை செலவழிக்கப்பட்டிருந்த போதிலும் எதிர்பார்த்த விளைவு மட்டம் கிடைத்திருக்கவில்லை. | அபிவிருத்தித் திட்ட ஒப்பந்தங்களின் பிரகாரம் உரிய காலத்துக்குள் நிறைவேற்ற வேண்டும் | கருத்து தெரிவிக்கவில்லை. |

(ஈ) எதிர்பார்த்த நலன்களைப் பெற்றுக்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| திகம்பதஹ கொம்போஸ்ட் செயற் திட்டத்தினால் உற்பத்தி செய்யப்படும் உரத்தை மொத்தமாக விற்பனை செய்வதற்கு அரலிய எக்ரோ ஹோல்டிங்ஸ் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த போதிலும் உர விற்பனை நடைபெற்றிருக்கவில்லை. | தயாரிக்கப்பட்ட உரத்தை விற்பதற்கான நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை. |

(உ) பணிகளை நிறைவேற்றுவதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2019 ஆம் ஆண்டில் அனுமதி வழங்கப்பட்ட 28 அபிவிருத்தித் திட்டங்களுக்குரிய பணிகள் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | செயற் திட்டங்களுக்கு உரிய நடவடிக்கைகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை. |

**(ஊ)** திண்மக் கழிவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| திண்மக் கழிவு முகாமைத்துவத்திற்காக மீளாய்வாண்டில் ரூபா 35,898,123 தொகையும், வேலைத் திட்டத்தின் கட்டுமானப் பணிகளுக்காக ரூபா 250 மில்லியனுக்கு மேற்பட்ட தொகை செலவழிக்கப்பட்டிருந்ததோடு அவ் வேலைத் திட்டத்தால் எதிர்பார்த்த நலன்கள் ஈட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர்பார்த்த நலன்களை நோக்கி திட்டத்தை வழி நடத்துவது உடனடியாக செய்யப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை. |

(எ) சுற்றாடல் பிரச்சினைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திகம்பதஹ திண்மக் கழிவு வேலைத் திட்டக் காணிக்கு வெளியே மலக் கழிவுகள் கொட்டப்படுவதால் காட்டு யானைகள் அந்த இடங்களில் நீராடுவதற்கு ஒரு தீர்வாக கட்டப்பட வேண்டிய கழிவு நீர் அமைப்புகளைக் கட்டுவது மீளாய்வாண்டின் இறுதி வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை. | நிர்மாண நடவடிக்கைகள் விரைவு படுத்தப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை. |

(ஏ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாநகர சபை நிலைபேறான அபிவிருத்தி இலக்கு செயற்படுத்துவதாக அறிவிக்கப்பட்டிருந்த போதும் அந்த இலக்குகளை அடைந்துகொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை இனங்கண்டு நிறைவேற்றவதற்கு திட்டங்கள தயாரிக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை. |

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அறிவிக்காமல் பணிக்கு சமூகமளிக்காதிருந்தமை வருகை மற்றும் வெளியேறும் பதிவேட்டின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருந்த நிலையிலும் இரண்டு ஊழியர்களுக்கு ரூபா 32,032 தொகை ஊதியமாக வழங்கப்பட்டிருந்தது. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்தத் தொகையின் ஒரு பகுதி அறவிடப்பட்டுள்ளதோடு எஞ்சிய தொகை தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருப்பதாக அறியத் தருகிறேன். |

3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகை ஊழியர்கள்** | | |
| i. மீளாய்வாண்டின் இறுதியில் சபையின் அலுவலக 37 ஊழியர் வெற்றிடங்கள் காணப்பட்டன. அத்தோடு 45 தொழிலாளர் பதவிகள் மிகையாகக் காணப்பட்டன. | வெற்றிடங்களை நிரப்புவதற்கும் தேவைக்கேற்ப இணைத்துக் கொள்வதும் நடைபெறுதல் வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை. |
| ii. மா நகர சபையின் கீழ் நடத்தப்படும் பாலர் பாடசாலையொன்று இல்லாத போதும் ஆரம்பிப்பதற்காக தயார் நிலையில் இல்லாமலட் பாடசாலை காப்பாளர் பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு அவருக்கு 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் 16 முதல் விளைவற்ற வகையில் ஊதியக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | தேவைக்கு ஏற்ப மாத்திரமே ஆள் சேர்ப்பு செய்யப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை. |
| **(ஆ) ஒழுங்கு நடவடிக்கை** | | |
| பணி நீக்கம் செய்யப்பட்ட ஊழியர் ஒருவர் பெற்றுக் கொண்ட விடுமுறைகள், சம்பளமற்ற விடுமுறைகளாகக் கருதப்படாமல் ரூபா 128,160 தொகை சம்பளமாக் கொடுப்பனவாக செய்யப்பட்டிருந்தது. | வழங்கப்பட்ட சம்பளத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இத்தொகையை அறவிட தேவையான நடவடிக்கைகள எடுக்கப்பட்ட அறிய தருகின்றேன் . |
| **(இ) ஊழியர் கடன்** | | |
| மா நகர சபையில் பணியாற்றும் மற்றும் இட மாற்றம் பெற்றுச் சென்ற ஊழியர்களிடமிருந்து ரூபா 364,087 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. | நிலுவை ஊழியர் கடன்களை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்தத் தொகையை அறவிடத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அறியத் தருகிறேன். |

(ஈ) ஊழியர் பிணை

| மத்பிணை வைக்க வேண்டிய பணியாற்றும் பதவிகள் 07 ஊழியர்களிடமிருந்து பிணை வைப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் பிணை வைப்பு செய்யப்படல் வேண்டும். | பிணை வைப்புத் தொகையை அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். |
|---|---|---|

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல்களை மேற்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 பெப்ரவரி 11 ஆந் திகதி மோட்டார் வாகனம் நகர சபைக்குக் கொண்டு வரப்பட்டுள்ள போதிலும் ஒரு ஆண்டு கழிந்தும் இதுவரை பழுது பார்த்து ஓட்டத்தில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பழுது பார்த்தல் நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். | வாகனத்தின் உரிமத்தைப் பெற்றுக் கொண்டதன் பிறகு பழுது பார்க்கும் நடவடிக்கையை மேற்கொள்வதாக அறியத் தருகிறேன். |

### 3.4.2 கையேற்கப்படாத சொத்துகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நகர சபையினால் பயன்படுத்தப்படும் வாகனங்கள் 07 இற்குரிய உரித்தை நகர சபைக்குப் பொறுப்பேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகன உரித்தைப் பொறுப்பேற்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வாகன உரித்தைப் பொறுப்பேற்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக் கொண்டிருப்பதை அறியத் தருகிறேன். |
| (ஆ) | திகம்பதஹ கொம்போஸ்ட் கொட்டகை நிறுவப்பட்டிருக்கும் காணியின் உரித்தினை நகர சபைக்கென பெற்றுக் கொண்டிருக்கவில்லை. | காணிகளின் உரித்து வேலைகளை விரைவுபடுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்க வில்லை. |

3.4.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நகர சபைக்குச் சொந்தமான வாகனங்கள் 02 இற்குத் தேவையான பழுது பார்க்கும் நடவடிக்கைகள் நீண்ட காலமாக திருத்தம் செய்யப்படாமையினால் அந்தச் சொத்துகள் குறைப் பயன்பாட்டு நிலைமையில் காணப்பட்டன. | வாகனங்களைப் பழுதுபார்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த வாகனங்களைப் பழுது பார்க்கும் வேலைகளுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். |
| (ஆ) | நீண்ட காலமாக சேதமுற்ற நிலைமையில் காணப்படும் 02 ஜீப் வண்டிகளை அகற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உடைந்த வாகனங்கள் அகற்றப்பட வேண்டும். | பொருத்தமான முறையில் வாகனங்களை அகற்றுவதற்குத் நடவடிக்கைகளை எடுப்பதாக அறியத் தருகிறேன். |
| (இ) | தித்தவெல்கொல்ல பிரதேசத்தில் ரூபா 1,000,000 அளவு பெறுமதி கொண்ட மருந்தகம் ஒன்றும் உடற்பயிற்சி நிலையம் ஒன்றும் நிர்மாணிக்கப்பட்டு ரூபா 100,000 அளவு மதிப்புள்ள உடற்பயிற்சி உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ள போதிலும் 2015 ஆம் ஆண்டில் இருந்து பாவனைக்கு எடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களைப் பாவனைக்கு எடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்க வில்லை. |

3.4.4 வருடாந்த பொருள் மெய்மையாய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பேரூந்து நிலையம் மற்றும் திரையரங்கு ஆகியவற்றுக்கு உரிய பண்டங்களின் கணக்கெடுப்பு நடைபெற்றிருக்கவில்லை. | அனைத்துப் பிரிவுகளிலும் பண்டங்களின் கணக்கெடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட வேண்டும். | எதிர் வரும் ஆண்டில் திரையரங்கின் பொருள் மெய்மையாய்வை மேற்கொள்வதாக அறியத் தருகிறேன். |

3.4.5 வாகன பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| தம்புள்ளை மா நகர சபைக்குச் சொந்தமாகக் காணப்பட்ட 12 வாகனங்ககளுக்குரிய வருடாந்த வருமான அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அனைத்து வாகனங்களுக்கும் வருடாந்த வருமான அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். | பதிவுச் சான்றிதழைப் பெற்றுக் கொண்டு மற்றும் பழுது பார்க்கும் நடவடிக்கைகளின் பின்னர் வருடாந்த வருமான அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். |

3.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மா நகர சபைக்குச் சொந்தமான வாகனம் விபத்தில் சிக்கியதன் காரணமாக செலவிடப்பட்ட பழுது பார்த்தல் செலவினம் மற்றும் கிடைத்த காப்புறுதி நட்டஈடு ஆகியவற்றுக்கிடையே வேறுபாடு காணப்பட்டதால் நகர சபை நிதியத்திற்கு ரூபா 199,286 நட்டம் ஏற்பட்டிருந்ததுடன் அதற்குப் பொறுப்பான நபர்களிடமிருந்து அந்த நட்டத்தையை அறவிடுவதற்காக நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் விசாரணை நடத்தப்பட்டிருக்கவில்லை. | நிதி பிரமாணத்தின் பிரகாரம் நட்டத்துக்குப் பொறுப்பான நபர்களை உறுதிப்படுத்தும் பரிசோதனை நடத்தப்பட்டு நட்டத் தொகை அறவிடப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்க வில்லை. |

3.6 பெறுகை

3.6.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2006 கொள்வனவு வழிகாட்டல் கையேட்டின் 4.2.1 ஆம் பிரிவின் பிரகாரம் சபையினால் வருடாந்த கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கொள்வனவு வழிகாட்டல் கையேட்டின் பிரகாரம் பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டுக்கான பெறுகைத் திட்டமொன்றை தயாரிக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கிறேன். |

3.6.2 வழங்கல் மற்றும் சேவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பாதைகளைச் சரி செய்யும் வேலைக்காக 300 கியுப் சரளைக் கற்களை களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு விலை மனுக் கோரி ரூபா 649,800 செலுத்தப்பட்டிருந்த போதிலும், இது தொடர்பாக வழங்குநர்களுக்கு விலை மனுக் கோரி கடிதங்கள் அனுப்பியதாக மற்றும் கொள்வனவு செயற்பாடு தொடர்பாக பெறுகை வழிகாட்டல் கையேட்டின் பிரகாரம் இடம்பெற்றமைக்கு சான்றுகள் காணப்படவில்லை. | பெறுகை வழிகாட்டல் கையேட்டின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்க வில்லை. |

3.6.3 ஒப்பந்த நிர்வாகம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கவஷிமா செயற்திட்டக் காணியில் நில அலங்கார நடவடிக்கைகளை மேற்கொள்தல். | | |
| i. | மதிப்பிடப்பட்ட பெறுமதியின் 39% ஆன ரூபா 732,000 க்கு அதிகமான பாகங்கள் பூர்த்தி செய்யப்படாத நிலைமையில் ஆலோசனை நடவடிக்கைகளுக்காக மொத்தத் தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மதிப்பிடப்பட்ட தொகையில் 1% ஐ செலுத்துவதற்கு பொது சபையின் அனுமதி கிடைத்திருப்பதாக அறியத் தருகிறேன். |
| ii. | கவஷிமா வேலைத் திட்டக் காணியில் நில அலங்கார வேலைகளுக்காக ரூபா 328,900 பெறுமதியான செடிகளில் ரூபா 168,875 பெறுமதி கொண்ட செடிகளை வேலைத் திட்டக் காணியில் காணக் கிடைக்கவில்லை என்பதோடு சில செடிகள் முறையான பராமரிப்பு இல்லாத காரணத்தால் வரண்டு போயிருந்தன. | பராமரிப்புப் பணிகள் முறையாக நடைபெற வேண்டும் மற்றும் பண்டங்களை ஒழுங்காகப் பெற்றுக் கொண்டதன் பின்னரே பணம் செலுத்தப்பட வேண்டும். | இப் பிரதேசம் அதிக வெப்பத்தைக் கொண்ட பிரதேசம் என்பதனால் செடிகள் அழிவுக்கு உள்ளாகியுள்ளதை அறியத் தருகிறேன். |

| | | |
|---|---|---|
| iii. கிட்டத்தட்ட 350 சணல் செடிகள் அளவில் காணியில் நடப்பட்டிருந்த போதிலும் கிட்டத்தட்ட 200 செடிகள் ஓரிடத்தில் குவித்து வைக்கப்பட்டிருந்ததால் அக் காணிக்காகக் கிடைத்த மொத்த செடிகளின் எண்ணிக்கை 550 என்பது உறுதியானதோடு சணல் செடிகள் 3000 ஐ கொள்வனவு செய்வதற்காக ரூபா 180,000 செலுத்தப்பட்டிருந்ததால் அங்கு காணப்படாத 2450 சணல் செடிகளுக்காகவும் ரூபா 147,000 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | பராமரிப்புப் பணிகள் முறையாக நடைபெற வேண்டும் மற்றும் பண்டங்களை ஒழுங்காகப் பெற்றுக் கொண்டதன் பின்னரே பணம் செலுத்தப்பட வேண்டும். கூடுதலாக செலுத்திய பணத்தை அறவிட வேண்டும். | தேவையான அளவு இந்தச் செடிகள் கிடைத்திருந்த போதிலும் அதிக வெப்ப பிரதேசம் காரணமாக அழிந்து போயிருக்கின்றன. இந்தச் செடிகள் உரிய அளவில் கிடைத்திருந்த போதிலும் வெப்ப பிரதேசம் காரணமாக அழிந்து போயிருந்த போதும் எஞ்சியுள்ள செடிகளிலிருந்து உருவாகும் கிளைகளைக் கொண்டு யானைகளுக்கான வேலியை அமைக்க நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். |
| (ஆ) செயற்திட்டக் காணியைச் சுற்றி ரூபா 1,101,358 செலவழித்து தற்காலிகமாக யானை களுக்கான வேலியொன்று அமைக்கப்பட்டிருப்பதோடு நிரந்தர யானை வேலிகளுக்காக புகையிரதத் திணைக்களத்திடமிருந்து ரயில் 15400 அடி தண்டவாளங்களை கொள்வனவு செய்வதற்காக 2019 மார்ச் 27 ஆம் திகதி அமைச்சரவையிலிருந்தும் அனுமதி பெறப்பட்டுள்ளது. எனினும் மீளாய்வாண்டின் இறுதி வரை அப் பணி ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | யானை வேலிகளை நிர்மாணிக்கும் பணிகளை விரைவு படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்க வில்லை |

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

---

4.1 உள்ளகக் கணக்காய்வு

---

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மாநகர சபையின் உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் கணக்கீட்டு நடவடிக்கை களுக்கு ஒத்துழைப்பு வழங்கக்கூடிய வகையில் உள்ளக கணக்காய்வு பிரிவொன்று நடாத்திச் செல்லப்பட்டிருக்க வில்லை. | உள்ளக கணக்காய்வு பிரிவொன்று நடாத்திச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சபையில் பொருத்தமான உத்தியோகத்தரொருவர் இல்லாமை காரணம் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | உள்ளக கணக்காய்வு திட்டமொன்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் கலந்துரையாடலுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வு திட்டம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டும் | கருத்து தெரிவிக்கவில்லை. |

4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஓராண்டிற்கு 04 உள்ளக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் 02 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன. | சுற்றறிக்கை பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும் | 2019 ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்டதன் பிரகாரம் நடாத்துவதற்கு தயார்படுத்தப்பட்ட போதும் அத்தியவசிய செயற்பாடுகள் காரணமாக ஈடபடுத்திய திகதிகளில் அக்குழுவை நடாத்த முடியாதிருந்ததாக அறிய தருகின்றேன். |